1993 ஏப்ரல் 19]

398—

தென்னை, அல்பீஸியா மரங்கள் பயிரிடுவதால் நெல் உற்பத்தி பாதிப்பு.

* 15096—திரு. மா. சுந்தரதாஸ் :

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நெல் பயிரிடும் வயல்களில் தென்னை, அல்பீஸியா போன்ற மரங்களை பயிரிடுவதால் நெல் உற்பத்தி குறைவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு அதற்கு என்ன நடவடிக்கை மேற்கொள்ளவிருக்கிறது?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நெல் பயிரிடும் வயல்களில் சாதாரணமாக தென்னை அல்பீஸியா போன்ற மரக்கன்றுகள் வரப்பு ஓரங்களில் தான் நடவு செய்யப்படுகின்றன. இதனால் மகசூல் பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது. மேலும் மரங்கள் இளங்கன்றுகளாக இருக்கும்பொழுது ஏற்படும் நிழல் பாதிப்பினால் பூச்சி நோய் தாக்குதல் ஏற்பட சாத்தியக் கூறுகள் உள்ளன. இதனைத் தவிர்க்க முன் எச்சரிக்கை நடவடிக்கையாக பூச்சி பூஞ்சான் மருந்து தெளித்து பூச்சி நோய் பாதிப்பு ஏற்படாமல் பாதுகாக்க தொழில் நுட்ப செய்தியாக விரிவாக்கப் பணியாளர்கள் மூலம் விவசாயிகளுக்கு தெரிவிக்கப்படுகிறது.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நெல் பயிரிடும் வயல்களில் சில நில உடமையாளர்கள் முழுமையாகவே தென்னை, அல்பீஸியா போன்றவைகளை நடுகிறார்கள். தென்னை அதிகமான

லாபம் கொடுப்பதால், நெல் பயிரிடாமல் இருக்கிறார்கள். இதை அரசாங்கம் தடுக்கவில்லை என்றால் நெல் பயிரிடும் வயல்கள் முழுவதும் நஷ்டப்படும் நிலைமை இருக்கிறது. ஆகவே இதைத் தடுக்க அரசு ஏதாவது சட்டம் கொண்டு வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்தின் மூலம் விவசாயிகளை இன்ன பயிர் செய்ய வேண்டும் அல்லது இன்ன பயிரைச் செய்யக்கூடாது என்று தடை செய்வதற்கான சாத்தியக்கூறு இல்லை. ஆனால் விவசாயிகளுக்கு அரசு ஆலோசனை வழங்கலாம். உங்களுடைய வயல்களிலே நீங்கள் இந்த மரங்களை வைத்தால், உங்களுடைய விளைச்சல் பாதிக்கப்படலாம், நஷ்டம் ஏற்படும் என்று அரசு அலுவலர்கள் மூலமாக அவர்களுக்குச் செய்திகளைச் சொல்லி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாகர்கோவில் பகுதியிலே மெயின் ரோட்டில் இருக்கின்ற அனைத்து வயல்களிலும் பல மாடிக் கட்டிடங்களைக் கட்டுகிறார்கள். அதை அரசாங்கம் அனுமதிக்கிறதா என்பது தெரியவில்லை. ஆனால் நாகர்கோவில் பகுதியில் இருக்கும் அனைத்து நிலங்களிலும் வீடுகள் கட்டும் நிலைமை இருக்கிறது. இதைத் தடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஒரு நல்ல திட்டத்தை மறந்துவிட்டார்கள் என்று நினைக்கிறேன். தமிழகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசுப் பொறுப்பேற்றவுடன், தன்னுடைய முதல் வேளாண்மை மானியக் கோரிக்கையிலே விளை நிலங்களில் வீடு கட்டுவதற்கும், தொழிற்சாலைகள் கட்டுவதற்கும் வேளாண்மைத் துறையிடம் அனுமதி பெற்றுத்தான் செயல்படுத்த வேண்டுமென்ற சட்டத்தைக் கொண்டு வந்தவர்கள் இந்தியத் துணைக் கண்டத்திலேயே நம்முடைய முதலமைச்சர் என்பதை இன்றைக்கு அனைவரும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். எனவே இந்தச் சட்டத்தின் மூலமாக அநேக விளை நிலங்கள் வீட்டு மனைகள் ஆக்கப்படுவது தவிர்க்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 399, திருமதி க. பழனியம்மாள், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.